மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதன்முதலில் சொன்னேன். இதற்கு முன்பு அவர்களுக்கு எல்லாம் ரூ. 750லிருந்து ரூ. 1,000 வரை தான் கொடுக்கப்பட்டது. 1977–78 வரவு செலவுத் திட்டத்தின்போது தான் இந்த அரசு ரூ. 5,000 என்று அதை உயர்த்தி இருக்கிறது. ரூ. 750 என்று இருந்ததில் இருந்து எவ்வளவு தாண்டி வந்து இருக்கிறது. ரூ. 1,000 என்று இருந்தது ரூ. 5,000 என்ற அளவில் 5 மடங்காக உயர்ந்து இருக்கிறது. அதற்கு மேல் கொடுப்பதற்கு யோசிக்கப்படும்.

மேட்டுப்பாளையம், குன்னூர் சர்வீஸ் நிர்வாகத் தொழிலாளர்கள்.

*குறுகிய கால வினா எண். 36—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் குன்னூர் சர்வீஸ் (M. C. S. Bus) நிர்வாகம் தம் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையினை திருப்பித்தர என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) தொழிலாளிகளுக்குச் சேரவேண்டிய தொகையினை நிர்வாகத்தினடமிருந்து வசூலித்து தொழிலாளர்களுக்கு திருப்பியளிக்க கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1976ஆம் ஆண்டிலேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த ஆணைகளின் மீது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிடம் சட்ட சம்பந்தப்பட்ட சில விளக்கங்கள் கேட்டுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு விளக்கங்களை அளித்தவுடன் ஆட்சித் தலைவர் தொழிலாளர்களுக்குத் தொகைகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மேட்டுப்பாளையம் குன்னூர் சர்வீஸ் (எம். சி. எஸ். பஸ்) நிர்வாகம் பற்றிக் குறிப்பிடுகிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிலாளர்களையும், அந்த சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை சந்தித்துப்பேசி, இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டதாகத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது என்பது சட்டமுறை. தொழிலாளர்கள் கோர்ட்டிலே தொழிலாளர்களுக்கு இவ்வளவு தொகை தரவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டு, அதன்படி முதலாளி தொழிலாளர்களுக்கு தரவில்லை என்று சொன்னால், செக்ஷன் 33 (சி) பிரகாரம் அரசு கலெக்டருக்கு எழுதி, கலெக்டர் அவர்களுக்கு ஆணையிடுவார். ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் அர்ரியர்ஸ் ஆப் லேன்ட் ரெவின்யூ என்ற முறையில் பணத்தை முதலாளியிடத்தில் வசூல் செய்து தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். அந்த உத்தரவுகள் செயல்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால், இரண்டு பாரா இருக்கிறது, அதைச் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த எம். சி எஸ். பஸ் நிறுவனம் ஏராளமாக மத்திய சர்க்காருக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருப்பதாகவும், ரூ. 35 லட்சத்திற்கு மேல் கொடுக்காமல் இருப்பதாகவும் ஜனங்களிடத்தில் பேச்சு அடிபடுகிறது. அந்த முதலாளி அங்குள்ள ஸ்டாப்களுக்கு ஒரு காசு கூட கொடுக்காமல், அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கிராசுயுடி கூட கொடுக்காமல் இருக்கிறதால், அவர்கள் திண்டாடுகிறார்கள். அதைத்தான் இன்றைக்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். மத்திய சர்க்காருக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக அவர்கள் சொத்துப் பூராவும் மொத்தமாகக் கொண்டு போய்விட்டால் நம்முடைய தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் என்ன செய்வது? அதைத் தீவிரமாக விசாரணை செய்து, அதிலே சட்ட சிக்கல் இருந்தால் அதைத் தீர்த்துவைத்து, தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டியதை முதல் பட்டியல் போட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சற்று நீளமாகப் படிப்பதற்கு அனுமதி தர வேண்டும். பரவலாகப் பேசுவதைப் பற்றி அரசு அக்கறை கொள்ள முடியாது, நடவடிக்கை எடுக்க முடியாது. நான் நிலைமையைப் படித்து விடுகிறேன்.

1. கோவையில் உள்ள மத்திய அரசின் வரிவசூலிக்கும் அலுவலர் நிர்வாகத்தினர் ஏற்கனவே செலுத்த வேண்டிய வரி பாக்கியான ரூ. 7,69,886.99க்காக நிர்வாகத்தினரின் உடைமைகள் 8.9.69 முதலே கைப்பற்றப்பற்றிருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார். ஆனால், இந்த அலுவலர் தனது கூற்றை தஸ்தாவேஜுகளைக் கொண்டு நிரூபிக்கவும் இல்லை.

2.8.1977-க்குப் பின்னால் இது விஷயம் குறித்து யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவில்லை. ஆகவே இந்த அலுவலரின் கூற்றை ஒதுக்கி விடலாமா?

There are two more aspects. The hon. Members may please bear with me....

2. நிர்வாகத்தின் சொத்துக்கள் மொத்தம் ரூ. 43,983-க்கு பொது ஏலத்தில் விற்கப்பட்டன. ஆனால், நிர்வாகத்திடமிருந்து தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய தொகையோ ரூ. 1,75,800.29. நிர்வாகத்திடம் இடம் பெயரக்கூடிய அல்லது இடம்பெயர முடியாத சொத்துக்கள் யாதும் இல்லையாதலால், நிர்வாகத்தின் சொத்துக்களை பொது ஏலத்தில் விடப்பட்டதினால் கிடைத்த ரூ. 43,983.00 ஐ தொழிலாளிகளுக்கு விகிதாசார முறைப்படி பிரித்துக் கொடுத்து விடலாமா?

[முற்பகல் 9-10]

நிர்வாகத்தின் நிர்வாக இயக்குநர் இறந்துவிட்டதால் நிர்வாகத்திற்குச் சொந்தமான இடம் பெயரக்கூடிய அல்லது இடம் பெயரா சொத்துக்கள் பொது ஏலத்தில் விடப்பட்டன. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட தொழில் தகராறு காரணமாக தொழிலாளர்களுக்கு தொகை சேரவேண்டியிருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தின் மற்ற இயக்குநர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள்மீது நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது. அந்தக் கம்பெனி பணம் இல்லை என்றாலும் பிற சொத்துக்களை அட்டாச் பண்ண முடியுமா என்று கேட்கப்பட்டிருக்கிறது.

Government is not sleeping. It is very active.

இயக்குநர் சொத்துக்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்றும் கேட்டிருக்கிறோம். நிர்வாகம் தரவேண்டிய பாக்கித் தொகைக்காக மற்றவர்களின் சொத்துக்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது என்று கோவை வழக்கறிஞர் கூறியிருக்கிறார். அது சரிதானா? That is also being examined.

மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதற்கு சட்டத் துறையை அறிவுரை வழங்க கோரப்பட்டிருக்கிறது. அறிவுரை கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

Hon. Member will appreciate this, I suppose.